**செய்தி வெளியீடு எண் : 1782** **நாள் : 11.10.2022**

# <u>செய்தி வெளியீடு</u>

## மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.வி செந்தில்பாலாஜி அவர்கள் தலைமையில் தமிழகத்தில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு நடத்தினார்.

தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.வி செந்தில்பாலாஜி அவர்கள் தமிழகத்தில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினரால் இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் விரிவான ஆய்வினை மேற்கொண்டார். இக்கூட்டத்தில் அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள், அனைத்து மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர்கள் கலந்து கொண்டனர், இந்த ஆய்வுக் கூட்டத்தின் போது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., இயக்குநர்/பகிர்மானம் திரு.மா.சிவலிங்கராஜன் அவர்கள், தலைமை அலுவலக தலைமைப் பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தின் போது மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் எதிர்நோக்கி இருக்கும் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்வதற்காக 14,442 மின்மாற்றிகள், 1,50,932 மின் கம்பங்கள் மற்றும் 12,780 கி.மீ. மின்கடத்திகள் கையிருப்பில் உள்ளதாகவும், கடந்த 15.06.2022 முதல் 08.10.2022 வரை 13,65,769 சிறப்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்றும் அவற்றுள் 39,616 மின்கம்பங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன, சாய்ந்த நிலையில் இருந்த 31,197 மின் கம்பங்கள் சரிசெய்யப்பட்டிருக்கின்றன, புதியதாக 25,080 மின் கம்பங்கள் இடைசெருகல் செய்யப்பட்டிருக்கின்றன, 1,08,947 இடங்களில் பலவீனமான இன்சுலேட்டர்கள் மாற்றப்பட்டிருக்கின்றன, 40,685 இடங்களில் மின்கம்ப தாங்கு கம்பிகள் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன எனவும், இதுதவிர்த்து சுமார் 1,759 கி.மீ. பழைய மின்கம்பிகள் புதியதாக மாற்றப்பட்டிருக்கின்றன எனவும் தெரிவித்தார்.

சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் இதுவரை 2,692 பில்லர் பாக்ஸ்கள் தரைமட்டத்திலிருந்து ஒரு மீட்டர் உயரத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கின்றன. இதேபோன்று, 16 உயரழுத்த மின்மாற்றிகளின் அடித்தளம் ஒரு மீட்டர் உயரத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது எனவும், நீர்ப்பிடிப்பு பகுதிகளில் உள்ள 62 விநியோக மின்மாற்றிகள் இடம் மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன எனவும் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர்கள் அனைவருக்கும் கீழ்கண்ட அறிவுறுத்தல்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

- ஒவ்வொரு மின் பகிர்மான வட்டத்திற்கும் செயற்பொறியாளர்/பொது அவர்கள் சிறப்பு அலுவல் அதிகாரியாக நியமிக்கப்பட வேண்டும். இவரின் தலைமையின் கீழ், அந்த மின் பகிர்மான வட்டத்தில் இரண்டு பாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்படும்.
- மரம் வெட்டும் உபகரணங்கள், பாதுகாப்பு உபகரணங்கள் அனைத்தும் இயங்கும் நிலையில் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும் மற்றும் தேவைப்படும் அனைத்து தளவாடப் பொருட்களையும் இருப்பில் வைத்துக் கொள்வதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
- ஜே.சி.பி., கிரேன்கள் உள்ளிட்ட வாகன உரிமையாளர்களின் தொலைபேசி எண்களை முன்னமே கேட்டறிந்து அவைகளின் தயார்நிலை உறுதி செய்யப்பட வேண்டும்.
- பேரிடர் காலங்களில் ஈடுபடும் பணியாளர்கள் தங்குவதற்கு உரிய பள்ளிகள், திருமண மண்டபங்கள், சமுதாயக் கூடங்கள் அடையாளம் காணப்பட்டு தயார் நிலையில் இருக்க வேண்டும்.
- வாரிய வாகனங்கள் அனைத்தும் செப்பனிடப்பட்டு எரிபொருள் நிரப்பப்பட்டு தயார் நிலையில் இருக்க வேண்டும்.
- மின் தடங்கல் ஏற்படின் முதற்கட்டமாக மருத்துவமனைகள், குடிநீர் இணைப்புகள், அரசாங்க அலுவலகங்கள், வங்கிகள் மற்றும் செல்போன் டவர்கள் அனைத்திற்கும் முன்னுரிமை அடிப்படையில் மின்சாரம் வழங்கப்பட வேண்டும்.
- சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் மழைநீர் தேங்கும் பகுதிகளில் மீதமுள்ள பில்லர் பாக்ஸ்களும் தரை மட்டத்திற்கு மேல் ஒரு மீட்டர் உயரத்தில் நிறுவும் பணிகள் அனைத்தும் இந்த மாதத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். இதற்குரிய அனைத்து நடவடிக்களையும் அந்தந்த மண்டல தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வை பொறியாளர்கள் மேற்கொண்டு பணிகள் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிவதை உறுதி செய்ய வேண்டும்.
- மேலும், Pillar Box–கள் அனைத்தும் உரிய முறையில் பராமரிக்கப்படுவதை அந்தப் பகுதியை சார்ந்த செயற்பொறியாளர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் கள ஆய்வு மேற்கொண்டு உறுதி செய்ய வேண்டும்.
- காற்றுடன் கூடிய மழையின் போது மிகத் தாழ்வான நிலையில் செல்லும் மேல்நிலை மின் கம்பிகள் அறுந்து விழுவதை தடுக்க உரிய நடவடிக்கையினை போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட வேண்டும்.
- இது போன்ற மழைக் காலங்களில் உயர் அலுவலர்கள் அனைவரும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தினருடனும், தீயணைப்பு துறையினருடனும் எப்பொழுதும் தொடர்பில் இருக்க வேண்டும்.
- அனைத்து அலுவலர்களும் தமது அலைபேசியை எந்தக் காரணம் கொண்டும் OFF செய்து வைக்கக்கூடாது எனவும், இதனை மீறுபவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

கடந்த ஜீலை 2022 முதல் 10.10.2022 வரை ஏற்பட்ட மின்தடங்கல் பற்றியும் விரிவான ஆய்வினை மேற்கொண்ட மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அலுவலர்கள் அனைவரும் மின் தடங்கல்கள் ஏற்படுவதற்கான காரணங்களை கண்டறிந்து அதனை உடனே களைவதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு அனைவரையும் அறிவுறுத்தினார்.

**பின்னர், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் செய்தியளார்களிடம் பேசுகையில்,**

மின்சார வாரியத்தின் சார்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மதிப்பிற்குரிய தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள், இயக்குநர்/பகிர்மானம் அவர்கள், தலைமைப் பொறியாளர்கள், மேற்பார்வை பொறியாளர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடந்து முடிந்திருக்கின்றது. குறிப்பாக கடந்த

ஆண்டு வடகிழக்கு பருவ மழையால் ஏற்பட்ட பாதிப்புகளும் அதை இந்த ஆண்டு மழை அதிகமாக இருந்தாலும் எந்த விதமான பாதிப்பும் இல்லாத அளவிற்கு சீரான மின் விநியோகம் செய்வதற்காக உத்தேசிக்கப்பட்ட பணிகள், அதில் முடிந்து இருக்கக்கூடிய பணிகள், இன்னும் முடியாமல் இருக்கக்கூடிய பணிகளை விரைவாக முடிப்பது குறித்த ஆய்வுக் கூட்டம். இந்த வடகிழக்கு பருவமழைக்காக 14,442 மின்மாற்றிகள் கையிருப்பில் உள்ளன. அதேபோல மின் கம்பங்களைப் பொறுத்தவரை 1,50,932 மின்கம்பங்கள் தயார் நிலையில் இருக்கின்றது.

12,780 கிலோ மீட்டர் நீளத்தில் மின்கம்பிகள் தயார் நிலையில் இருக்கின்றன. எனவே இந்த மழைக்காலங்களை எதிர்கொள்வதற்கான தளவாட பொருட்கள் தயார் நிலையில் உள்ள இருப்புகள் குறித்தும் அந்தந்த மண்டலங்கள் வாரியாக, வட்டங்கள் வாரியாக தேவையான தளவாட பொருட்கள் இருப்பில் உள்ளதா என்பதை இந்த ஆய்வு கூட்டத்தில் எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கின்றன. குறிப்பாக 15.06.2022 தொடங்கி 08.10.2022 வரை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சிறப்பு பராமரிப்புப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டதில் 13,65,000 பணிகள் நிறைவு செய்யப்பட்டு இருக்கின்றன. அதில் ஏறத்தாழ மின் கம்பங்களைப் பொருத்தவரைக்கும் பழுதடைந்த 39,616 மின்கம்பங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. சாய்ந்த நிலையில் இருந்த 31,197 மின் கம்பங்கள் சரிசெய்யப்பட்டிருக்கின்றன. புதிதாக 25,080 மின்கம்பங்கள் இடைச்செருகல் செய்யப்பட்டுள்ளன. மின்கம்பிகளை பொருத்தவரைக்கும் 1,759 கிலோமீட்டர் அளவிற்கு பழைய மின் கம்பிகள் புதிதாக மாற்றி பணிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

சென்னையை பொறுத்த வரைக்கும் 2,692 பிள்ளர் பாக்ஸ் தரை மட்டத்திலிருந்து ஒரு மீட்டர் அளவிற்கு உயர்த்தப்பட்டு இருக்கின்றன. ஏனென்றால், கடந்த மலையில் ஒரு பெரிய அனுபவமாக இருந்தது அரை அடி தண்ணீர் கூட விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டதும் மின் விநியோகம் நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த ஆண்டு அதுபோன்ற சூழல் வந்துவிடக்கூடாது என்பதற்காக 2,692 பில்லர் பாக்ஸ்கள் ஒரு மீட்டர் அளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கின்றன. இந்த மழையை எதிர்கொள்ளகூடிய வகையில் அவரது ஒவ்வொரு மின்பகிர்மான வட்டத்திற்கும் ஒரு செயற்பொறியாளர் அவருடைய தலைமையில் சிறப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள், குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன, அவர்களுக்கு தேவையான தளவாட பொருட்கள் அனைத்தும் தயார் நிலையில் இருக்கின்றன. எனவே, வடகிழக்கு பருவமழையைப் பொறுத்தவரை எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல் அதாவது மழை எவ்வளவு பெய்தாலும் கூட மின் விநியோகத்தில் எந்தவிதமான பாதிப்பும் இல்லாத அளவிற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சீரான மின் விநியோகத்திற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை, 5 கோட்டங்களில் புதைவடக் கம்பிகள் அமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த பணிகள் 2 மாதங்களில் முடிக்க உள்ளோம், அடுத்துள்ள 7 கோட்டங்களுக்கான பணிகள் மேற்கொள்ள திட்டங்கள் தயார் நிலையில் உள்ளது.

மின்னகத்தில் மழைக்காலங்களில் பெறப்படும் புகார்களை கவனிப்பதற்காக 3 மாத காலங்களுக்கு கூடுதலாக 15 நபர்கள் நியமித்து பணி மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 32,000 மெகாவாட் உற்பத்தி செய்ய நிறுவுதிறன் உள்ளது. அதில் 7,175 தான் மின் வாரியத்தின் சொந்தமான நிறுவுதிறன் மற்றவை தனியார் உற்பத்தி நிலையங்கள் மற்றும் வெளியில் இருந்து கொள்முதல் செய்வது. அடுத்து வரக்கூடிய ஆண்டுகளில் மொத்தம் நம்முடைய நிறுவுதிறனில் 50 விழுக்காடு அளவிற்கு மின் வாரியத்தினுடைய சொந்த நிறுவுதிறன் இருக்க திட்டமிடப்பட்டுள்ளது. 5 ஆண்டுகளில்

நம்முடைய மின்சார தேவை அதிகரிக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது, அதன்படி உற்பத்தி திட்டங்களும் அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

மின் வாரிய எல்லா வட்டங்களிலும் மாவட்ட ஆட்சியரோடு இணைந்து பணியாற்றுவதற்கான சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, 234 தொகுதிகளுக்கும் சிறப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அவர்கள் சம்மந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களை நேரில் சந்தித்து என்ன பணிகள் தொகுதிகளில் நடந்து முடிந்துள்ளன, என்ன பணிகள் நடந்து கொண்டிருக்கிறது, என்ன நடக்கப் போகிறது என்ற விவரங்களை விவரித்து, அவற்றை புத்தகமாக தயாரித்து நேரடியாக வழங்கியுள்ளார்கள். 316 துணைமின் நிலையங்கள் அமைக்கப்படும் என அறிவித்திருந்தோம். அதில் 62 துணை மின் நிலையங்களுக்கு மட்டும் தான் இடங்கள் பெற வேண்டிய சூழ்நிலை உள்ளது. 254 துணை மின் நிலையங்களுக்கு இடங்கள் பெறப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

***************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in